LIBRARY
30 AUG 1957
STATE LEGISLATURE, MAD

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 3rd May 1957.

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

I.—OBITUARY REFERENCES *RE* SRI P. T. SESHADRIACHARIAR, SRI R. S. VENKATARAMA AYYAR, SRI A. VAIKUNTAM AND SRI ANDI GOUNDAR.

MR. SPEAKER : முன்னால் இந்தச் சட்டசபை அங்கத்தினர்களாக இருந்த நான்கு பெரியோர்கள் இறந்துவிட்டார்கள் என்பதுபற்றி வருத்தம் தெரிவிக்க விரும்புகிறேன். முதலாவதாக இறந்துபோன ஸ்ரீ பி. டி. சேஷாத்ரி யாச்சாரியார் அவர்கள் இந்த சட்டசபையில் 1937-ம் ஆண்டில் அங்கத்தினராக இருந்தவர். இரண்டாவதாக ஸ்ரீ ஆர். எஸ். வெங்கடராமய்யர் அவர்கள்—அவர்களை சாதாரணமாக எல்லோரும் மட்டப்பாறை வெங்கடராமய்யர் என்று சொல்வதுண்டு—அவர்கள் இந்த சட்டசபையில் நல்ல முறையில் பணியாற்றி இறந்துவிட்டார். மூன்றாவதாக ஸ்ரீ வைகுண்டம் என்ற பெரியவர் நம் சட்டசபை அங்கத்தினராக இருந்து பணியாற்றி இறந்துவிட்டார். கடைசியாக ஸ்ரீ ஆண்டி கவுண்டர் இந்த சட்டசபைக்குத் எற்காட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு (ஷெடுல்ட் தொகுதியில்) இறந்துவிட்டார். இவர்கள் இறந்ததற்காக கொண்டுவரப்பட்ட அனுதாபத் தீர்மானத்தை இங்கு அங்கீகரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

I request the hon. Members to stand in silence for two minutes as a mark of respect to the deceased Members.

Accordingly, hon. Members stood in silence for two minutes.

II.—CONDOLENCE RESOLUTION ON THE DEATH OF SRI P. S. KUMARASWAMI RAJA.

THE HON. SRI C. SUBRAMANIAM : கீழ் கண்ட தீர்மானத்தை நான் உங்கள் முன் பிரேரேபிக்கிறேன்.

"This House places on record its deep sense of sorrow at the demise of Sri P. S. Kumaraswami Raja, former Chief Minister of Madras from 1949 to 1952 and conveys its deep sense of sympathy to the members of his bereaved family.''

ஸ்ரீ. பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்களைப்பற்றி அதிகமாக எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அவர் நம்முடைய ராஜ்ய முதல் மந்திரியாக இருந்து, பிறகு ஒரிஸ்ஸா ராஜ்யத்திற்கு கவர்னராகப் பணியாற்றி இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சிறப்பும், பெருமையும் இந்த அதிகாரங்களும் அவர்கள் இந்த பதவிகளை வகித்த காரணத்தினால் அல்ல. அவர்கள் சிறு வயது முதல் அதாவது 17, 18 வயது முதற்கொண்டே சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்திருக்கிறார். அவர் 19-ம் வயது ஆரம்பத்திலிருந்தே அதாவது 1917-ம் வருஷத்தில் ஹோம் ரூல் இயக்கத்தில் சேர்ந்து சுதந்திரத்திற்காகப் பாடுபட்டார். இதற்குப் பிறகு காந்திஜி அவர்கள் நடத்திய சத்தியாக்கிரக இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டார். 1932ம் வருஷத்தில் ஒரு முறையும், 1941-ம் வருஷத்தில் ஒரு முறையும் சிறை சென்றிருக்கிறார்கள். அவர் சிறை சென்றதோடல்லாமல் காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து சுதந்திர

இயக்கத்திற்குப் பெரும்பணியாற்றி யிருக்கிறார்கள். அதோடு கூட்டுறவுத் துறையில் அவர்கள் செய்து இருக்கக்கூடிய சேவை போற்றற்கரியது. அவர்கள் இந்த அசெம்பிளியில் அங்கத்தினராகவும், கனம் பிரகாசம் அவர்கள் மந்திரிசபையிருந்த காலத்தில் விவசாய மந்திரியாகவும், பிறகு முதல் மந்திரியாகவும் இங்கு பணி ஆற்றியிருக்கிறார்கள். அவர்களை நான் பல வருஷங்களாக அறிந்திருக்கிறேன். அவர்கள் நேர்மையுடனும், நியாயமாகவும் நடந்துகொள்ளவேண்டுமென்ற உறுதி பெற்றவர்கள். எது தன்க்கு சரி என்று தோன்றுகின்றதோ அதை தைரியமாகச் சொல்லக் கூடிய பண்பாடு படைத்தவர். இவர் இறந்து போன சமயத்திலே அங்கு நானும் இருக்கவேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆந்திர பிரதேசத்திலிருந்து வந்து கனம் பக்தவத்சலம் அவர்கள் வீட்டில் இருக்கும்போது திடீரென்று இருதய நோய் ஏற்பட்டது. உடனடியாக அரசாங்க விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து உடனடியாக ஹாஸ்பிடலுக்கு எடுத்துச்சென்றும், பயன் இல்லாமல் இறக்க நேர்ந்தது குறித்து வருந்துகிறேன். எல்லோருடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் அவர்களுடைய குடும்பத்தாருக்கு கனம் சபாநாயகர் மூலமாக தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் குமாரசாமி ராஜா அவர்களுக்கு மரியாதை செலுத்துகிற முறையில் இந்த சபை 11 மணியிலிருந்து அரை மணி நேரம் ஒத்திவைக்கவேண்டுமென்று கனம் சபாநாயகர் அவர்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்த அனுதாபத்தில் கலந்துகொண்டு, என்னைப் பொறுத்தமட்டில், ஸ்ரீ குமாரசாமி ராஜா அவர்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் ஸ்ரீ குமாரசாமி ராஜா அவர்கள் பெரிய மனுஷர். அவர்களை சில வருஷ காலமாக தெரியும். அவர் நல்லமுறையில் நாட்டிற்குப் பணியாற்றியவர். அவர் பல வருஷகாலமாக ஜில்லாபோர்டு பிரசிடெண்டாக இருந்து நல்ல பெயர் எடுத்தவர். சட்டசபையிலும் நல்லமுறையிலே பணியாற்றியவர். விவசாய மந்திரியாக இருந்து நல்ல சேவை செய்தார். பிறகு முதல் மந்திரியாக இருந்தும் நம் நாட்டிற்கு நல்ல சேவை செய்திருக்கிறார். அவர்கள் செய்த தொண்டைப் பாராட்டி, நமது பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர் லால் நேரு அவர்கள், குமாரசாமி ராஜா அவர்களுக்கு கவர்னர் பதவியைக் கொடுத்தார்கள். அவர் கடைசியாக சட்டசபைத்தேர்தலில் வெற்றி பெறுததால் இந்த சட்டசபையில் வரமுடியவில்லை. இருந்தாலும் அவர்கள் கவர்னர் பதவியை ஏற்று பெரும் பணியாற்றினார். அவர்கள் இன்னும் கொஞ்ச நாள் இருந்து அவருடைய அனுபவத்தைச் சொல்லாமல் போய் விட்டாரே என்று நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது. அவருடைய குடும்பத்தார்களுக்கு எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Sri M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்களும், காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சித் தலைவர் திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்களும் கூறிய கருத்துகளைத் தழுவி கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்கள் வயோதிக நிலை அடைந்து, இறந்து விட்டதாக கருதமுடியாது. தேச சேவையில் அநேக ஆண்டுகளாக பண்பட்ட விவேகமும், நிதானமும் நிறைந்த அவரை, இருதய நோய் திடீரென்று நம்மிடமிருந்து பிரித்துவிட்டது. எந்தக்கட்சியைச்சேர்ந்தவராயினும், விவேகமும், நிதானமும் நிறைந்த தலைவர்கள் தேவைப் படும் இந்தக்காலத்தில், பி. எஸ். கே. ராஜா அவர்களை இழந்தது நாட்டிற்கே பெருத்த நஷ்டம். கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

***Sri K. ANBAZHAGAN** : அவைத்தலைவர் அவர்களே, ஆளும் கட்சியின் சார்பிலே நிதி அமைச்சர் அவர்களும், எதிர்க்கட்சிகளின் சார்பிலே திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்களும். பொதுவுடமைக்கட்சியின்

3rd May 1957] [Sri K. Anbazhagan]

சார்பிலே திரு. கல்யாணசுந்தரம் அவர்களும், முன்மொழிந்து வழி மொழிந்த, இந்த அனுதாபத் தீர்மானத்தில் திராவிட முன்னேற்றக் கழகக்கட்சி சார்பில் நான் பங்கு கொண்டு, எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மறைந்த திரு. குமாரசாமி ராஜா, காங்கிரஸ் தலைவர்களிலேயே மிகச் சிறந்தவர். கண்ணியமும், நாணயமும், மேலான ஒழுக்கமும் உடையவர். அரசியல் தலைவர்களிடம் தங்களுடைய கட்சியைத் தவிர வேறு கட்சியைச் சேர்ந்தவர்களை மனதார மதித்துப் போற்றுகின்ற தன்மை சாதாரணமாக இருப்பதில்லை. ஆனால் மாற்றுக் கட்சியினரையும் மதித்து நடத்தியவர் நமது மறைந்த தலைவர். 11-10 a.m. இந்த பெரியாரை இழந்தது ஒரு கட்சிக்கு மட்டும் அல்ல, நாட்டுக்கே ஒரு பெரிய இழப்பு என்பதை எல்லாக்கட்சியைச் சேர்ந்தவர்களும் உணர்வார்கள். திரு. குமாரசாமி ராஜா அவர்கள் அரசியல் வாழ்க்கையிலே ஈடுபட்ட பின்னால் பொது மக்களுடைய நலன்களை மிகுதியாகக் கருதித் தன்னலத்தை மறந்து தியாகமே உருவாய், மக்களுடைய உள்ளத்திலே இடம் பெற்றுத் திகழ்ந்தார். கடைசி காலத்தில் எல்லோருடைய உள்ளத்திலேயும் அன்பின் வடிவமாக நிலைக்கின்ற பேறுபெற்ற தென்னாட்டுத் தலைவர்களுள்ளே திரு. குமாரசாமி ராஜா அவர்களும் குறிப்பிடத்தக்கவர் ஆவார்கள். கடைசி காலத்தில் அவர்கள் குறிப்பட்ட ஒரு கருத்து என்போன்றவர்களுடைய உள்ளங்களிலேயெல்லாம் மிகுதியாக இடம் பெற்றிருந்தது. அந்தக் கருத்து திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படும் என்று எண்ணிக் கொண்டிருந்தோம். தென்னாடு புறக்கணிக்கப்பட்டுவிட்டது என்ற கருத்தை ஒருவாறு அந்த மாபெரும் தலைவர் அவர்கள் வருத்தத்தோடு குறிப்பிட்டார்கள். அந்தக் கருத்தை அவர்கள் மேலும் மேலும் எடுத்துச் சொல்வார்களேயானால், இந்த நாட்டின் அவல நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படுவதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று கருதி, அவர்கள் அந்தக் கருத்தினை வலியுறுத்தலை நாங்கள் விழைந்துகொண்டிருந்த நேரத்தில், தென்னாட்டின் "துர்பாக்கியமான" சூழ்நிலையில் அந்த வீரரை இழந்ததற்கு, உண்மையை உரைக்கவிருந்த உத்தமரை இழந்ததற்கு, நாடு வாழ்வதற்கு வகை செய்ய விரும்பிய வல்லுனரை இழந்ததற்கு, உள்ளன்போடுகூடிய ஆழ்ந்த அனுதாபத்தையும், போற்றுதலையும் எங்கள் கட்சியின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The Chair associates itself with the sentiments expressed by the Hon. Leader of the House and other hon. Members. Personally, I feel deeply grieved at the death of Sri Kumaraswamy Raja, a great Indian. I request you to pass the resolution unanimously by standing in silence for a minute:—

"This House places on record its deep sense of sorrow at the demise of Sri P. S. Kumaraswami Raja former Chief Minister of Madras from 1949 to 1952, and conveys its deep sense of sympathy to the members of his bereaved family."

By way of passing the Resolution, I request the hon. Members to stand in silence for a minute.

The Resolution was passed *nem. con.* all the Members standing in silence for a minute.

MR. SPEAKER: As a mark of respect to the late Sri P. S. Kumaraswami Raja, the House will now adjourn and re-assemble at 11-30 a.m.

(The House re-assembled at half-past eleven of the clock.)